# வாக்கியம் அமைத்தல்

## (க - கா)

1. கண்

நாதன் கண்ணில் தூசி விழுந்தது.

2. கல்

ஆதிமனிதன் கற்களால் வீடு கட்டினான்.

3. கவிதை

நான் கவிதை போட்டியில் வெற்றி பெற்றன்.

4. கதவு

தச்சர் மரக்கதவு செய்தான்.

5. கடை

என் நண்பனுடன் கடைக்குச் சென்றேன்.

6. கதை

எனக்கு என் பாட்டி கதை சொன்னார்கள் .

7. கழுத்து

சிவன் கழுத்தில் பாம்பு இருக்கும்.

8. கல்வி

அனைவரும் கல்வி கற்க வேண்டும்.

Notebook writer

9. கடல்

கடல் அலைகள் பார்க்க அழகாக இருக்கும்.

10. கருப்பு

யானையின் நிறம் கருப்பு.

11. கழுதை

கழுதை அழுக்கு மூட்டையைச் சுமக்கும்.

12. கடிதம்

நான் என் தோழிக்கு கடிதம் எழுதுகிறேன்.

13. கரும்பு

கரும்பு மிகவும் இனிப்பாக இருக்கும்.

14. கண்ணாடி

என் தாத்தாவின் கண்ணாடியைக் காணவில்லை.

15. கல்யாணம்

என் மாமாவிற்கு கல்யாணம்.

16. கஞ்சி

கஞ்சி உடல் நலத்திற்கு மிகவும் நல்லது.

17. கத்தி

திருடனிடம் கத்தி இருந்தது.

18. கட்டுரை

காந்தியைப் பற்றிய கட்டுரையைப் படித்தேன்.

**19. கணினி**

**கணினி தகவல் தொடர்புக்கு உதவுகிறது.**

**20. காசு**

**கடைக்காரரிடம் காசு கொடுத்தேன்.**

Notebook Writer
Notebook Writer
Notebook Writer